**செய்தி வெளியீடு எண்.56** **நாள்: 25.07.2020**

## பத்திரிக்கை செய்தி

சென்னை மாவட்டத்தில் புதிதாக இணைக்கப்பட்ட 6 வட்டங்களுக்கு மட்டும் 1429ம் பசலிக்கான வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களாலும், மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களாலும் திருவொற்றியூர், அம்பத்தூர், ஆலந்தூர் மற்றும் மாதவரம் ஆகிய வட்டங்களில் சம்மந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர்களாலும் 29.06.2020 முதல் தொடங்கி 30.06.2020 வரை நடத்தப்பட்டது.

கோவிட் -19 ஊரடங்கு காரணமாக பட்டா மாறுதல் மற்றும் பொது மக்களின் இதர கோரிக்கைகள் சம்மந்தமான மனுக்களை கண்டிப்பாக நேரடியாக வழங்குவதை தவிர்த்து URL https://gdp.tn.gov.in/Jamabandhi என்ற இணையத்தின் மூலமாகவோ அல்லது இ-சேவை மையங்கள் மூலமாகவோ 29.06.2020 முதல் 15.07.2020 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கடைசி தேதி 31.07.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் சம்மந்தமான மனுக்களை 31.07.2020 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் தெரிவித்து கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01